දුරකථන / தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍ය / அமைச்சர் / Minister } 2784832, 2784807, 2785617
ලේකම් / செயலாளர் / Secretary } 2784812
කාර්යාලය / அலுவலகம் / Office } 2785141-50, Fax: 2784846
ඊමේල් / ஈ – மெயில் / E-mail : isurupaya@moe.gov.lk

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education
'ඉසුරුපාය' ශ්‍රී ජයවර්ධනපුර කෝට්ටේ බත්තරමුල්ල
'இசுருபாயா' ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பத்தரமுல்ல
"Isurupaya", Sri Jayawardhanapura Kotte Battaramulla.
පායල් සංවෘත ශාලාව

ඔබේ අංකය / உமது இல. / Your No. } ..........................

මගේ අංකය / எமது இல. / My No. } ED/01/12/15/02/05

දිනය / திகதி / Date } 2017.03. 31

சுற்று நிருப இல :- 17/2017

அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாணக் கல்விச் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விச் பணிப்பாளர்கள்,
அனைத்து அரசாங்க மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலைகளின் அதிபர்கள்,
அனைத்து பிரிவேனா பொறுப்பு மதகுருமார்களுக்கும்.

**பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்கள் தொடர்பில் ஆண்டு நிறைவு நினைவு முத்திரைகள் வெளியிடல்.**

இலங்கையிலுள்ள பாடசாலைகள், பிரிவேனாக்கள் தொடர்பில் ஆண்டு நிறைவு விழாக்களை ஒழுங்கு செய்யும் சந்தர்ப்பங்களில் அதற்காக நினைவு முத்திரை வெளியிடுவதற்கான செயற்பாடுகளில் ஈடுபடும் போக்கொன்றைக் காணக்கூடியதாக உள்ளது. நாட்டின் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்கள் மிக அதிகளவில் காணப்படுவதோடு இவ் அனைத்துப் பாடசாலைகளும் பிரிவேனாக்களும் ஆண்டு நிறைவு நினைவு முத்திரைகளை வெளியிட முயற்சித்தால் அதிகளவான பிரச்சினைகள் உருவாக இடமுண்டு.

இவ்வாறான வேண்டுகோள்களுக்காக, மேலும் ஆன்டு நிறைவு நினைவு முத்திரைகளை வெளியிடுவதன் மூலம் முத்திரைகளின் முத்திரை ரீதியான பெறுமதி வீழ்ச்சியடைவதற்கான அபாயத்தை இனங்கண்டு கொண்ட இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் முத்திரை ஆலோசனைக் குழு பாடசாலை, பிரிவேனாக்களின் ஆண்டு நிறைவுக்கான முத்திரைகளை வெளியிடாதிருப்பதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது.

எனவே பாடசாலை மற்றும் பிரிவேனாக்கள் தொடர்பாக ஆண்டு நிறைவு விழாக்களுக்காக இதன் பின் நினைவு முத்திரைகள் வெளியிடப்படமாட்டாது என்பதனால் அதிபர்கள், பிரிவேனா பொறுப்பு மதகுருமார்கள் அல்லது வேறு தனி நபர்கள் அல்லது குழுக்கள் அல்லது அமைப்புகள் மூலம் ஆண்டு நிறைவு நினைவு முத்திரை வெளியிடுவதற்க்க எவ்வித விண்ணப்பங்களையும் செய்தல் கூடாது.

இவ் அறிவுறுத்தல்களுக்கேற்ப எதிர் காலத்தில் செயற்படுமாறு அறியத்தருகின்றேன்.

சுனில் ஹெட்டியாராச்சி,
செயலாளர்,
கல்வியமைச்சு.

பிரதிகள்:-
01. ஜனாதிபதி செயலகம் - கொழும்பு — த.அ.கொ.பொ.
02. செயலாளர், அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சு — த.அ.கொ.பொ.
03. அஞ்சலதிபர் நாயகம் — த.அ.கொ.பொ.
04. கல்விப் பணிப்பாளர் - பிரிவேனா — தே.ந.எ.
05. கல்விப் பணிப்பாளர் - தனியார் பாடசாலைகள் — தே.ந.எ.